செய்தி வெளியீடு எண் : 421 நாள் : 02.03.2023

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், தேனாம்பேட்டை மண்டலம், சேப்பாக்கம் பெல்ஸ் சாலை சென்னை நடுநிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள உயர்தர அறிவுத்திறன் வகுப்பறையினை இன்று (02.03.2023) திறந்து வைத்தார்.**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், இந்த சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 7 சென்னை பள்ளிகளில் உள்ள 28 வகுப்பறைகளில் தலா ரூ.2 இலட்சம் மதிப்பீட்டில் என மொத்தம் ரூ.56 இலட்சம் மதிப்பீட்டில் உயர்தர அறிவுத்திறன் வகுப்பறை (Smart Class) அமைக்கப்படுவதைத் தொடர்ந்து, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு–114க்குட்பட்ட சேப்பாக்கம் பெல்ஸ் சாலை சென்னை நடுநிலைப்பள்ளியில் அமைக்கப்பட்ட உயர்தர அறிவுத்திறன் வகுப்பறையினை இன்று (02.03.2023) திறந்து வைத்தார்.

இந்த வகுப்பறையில் நவீன தொழில்நுட்பத்துடன் அமைக்கப்பட்டுள்ள திரைப் பலகையின் (Smart Digital Board) மூலம் மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கப்படும். நவீன தொழில் நுட்பத்துடன் திரையின் மூலமாக பாடங்கள் கற்கும் போது மாணவர்களின் கற்றல் திறன் மேம்பாடு அடைவதுடன், கல்வி கற்பதற்கும் ஊக்கம் அளிக்கும் வகையில் அமையும்.

இதனைத் தொடர்ந்து, இந்த வகுப்பறையில் அமைக்கப்பட்ட நவீன தொழில்நுட்பத்திலான திரைப்பலகையின் மூலம் கற்பித்தல் செயல்பாடுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

பின்னர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பள்ளியில் உள்ள மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் வருகை குறித்து வருகைப் பதிவேட்டினைப் பார்வையிட்டும், பள்ளியின் செயல்பாடுகள் குறித்து தலைமையாசிரியரிடம் கேட்டறிந்தும் ஆய்வு செய்தார்.

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பள்ளியின் கழிவறை மற்றும் பள்ளி வளாகத்தினை பார்வையிட்டு பள்ளி வளாகத்தினை எப்பொழுதும் சுத்தமாக வைத்துக் கொள்ள அறிவுரை வழங்கினார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர்கள் திரு.நே.சிற்றரசு (பணிகள்) அவர்கள், திரு.பாலவாக்கம் த.விசுவநாதன் (கல்வி) அவர்கள், மண்டலக் குழுத் தலைவர் திரு.எஸ்.மதன்மோகன் அவர்கள், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, இ.ஆ.ப., அவர்கள், மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.ஷேக் அப்துல் ரஹ்மான், இ.ஆ.ப., உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in